**சனாதிபதி நிதியம் - 2019**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சனாதிபதி நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல்.

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அபிவிருத்தி லொத்தர் சபையின் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், பரிசு வென்றவர்கள் தீர்மானிக்கப்பட்ட தினத்திலிருந்து 06 மாதங்கள் முடிவடைந்த பின்னர் பரிசளிக்கப்படாத பறிமுதல் செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய பொருட்களுக்கான 2015 ஆம் வருடத்திலிருந்து 2018 ஆம் வருடம் வரை கூட்டுத்தொகை 24,948,809 மற்றும் 2019 ஆம் | பறிமுதல் செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் இதர பொருட்களின் பணப் பெறுமதி சனாதிபதி நிதியத்திற்கு அபிவிருத்தி லொத்தர் சபையினால் காசாக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டிருக்க வில்லை. பறிமுதல் செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் இருப்பு ஏனைய | குறிப்பிட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடத்திற்கான கூட்டுத்தொகை ரூபா 16,033,489 ஆன நிதியம் இதுவரை கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | மேம்படுத்தல் சீட்டிழுப்புக்களுக்கு பயன்படுத்தப்படுமென அபிவிருத்தி லொத்தர் சபையினால் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2018 ஆம் வருடத்தில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,400,000,000 ஆன நிலையான வைப்புக்கள் 2019 ஆம் வருடத்தில் முதிர்ச்சியடைந்த போது ரூபா 138,320,000 வட்டி வருமானமொன்று பெறப்படவேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் வட்டி வருமானமாக ரூபா 130,575,027 மட்டுமே கணக்கிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 7,744,973 ஆன வட்டி வருமானம் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | ரூபா 1,400,000,000 இற்கான முதலீடுகளுக்காக வங்கியினால் ரூபா 7,744,973 ஆன நிறுத்தி வைத்தல் வரி அறவிடப்பட்ட பின்னர் ரூபா 165,155,027 ஆன வட்டிப் பணமாக தேறிய மதிப்பு காட்டப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் இறுதி விளைவிற்கு இது தாக்கமளிக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதி உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (இ) | கடன் கொடுத்தோர் மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகளுக்காக வழங்கப்பட்டும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 3,626,727 பெறுமதியான 06 மாதங்கள் கடந்த காசோலைகள் மீளாய்வாண்டின் வருமானமாகக் கருதப்படாது திரட்டிய நிதியத்திற்கு நேரடியாக செலவு வைக்கப்படாமையால் மீளாய்வாண்டின் மிகை அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது | கடந்த வருடங்களில் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகளாக கருதப்பட்டு திரட்டிய நிதியத்திற்கு சீராக்கப்பட்டது. | சரியான தகவல்களை உள்ளடக்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | | |
| | (i) காசுப்பாய்ச்சல் கூற்றில் மீளாய்வாண்டின் மிகைக்கு சீராக்கப்பட முடியாத முன்னைய வருடத்தின் மிகையில் மாற்றங்கள் ரூபா 6,522,113 ஆனது சீராக்கப்பட்டிருந்தது. | கணக்கீட்டு நிதியத்தின் கீழ் வெளிக்காட்டப்பட வேண்டிய மாதிரிப் படிவத்தின் கீழ் சீராக்கங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. | சரியான தகவல்களை உள்ளடக்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும |
| | (ii) காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் | காசுப்பாய்ச்சல் கூற்றில் அட்டுறு மிகுதிகள் குறிப்பிடப்பட்டிராத வழுக்கள் 2020 ஆம் | சரியான தகவல்களை உள்ளடக்கியதாக நிதிக்கூற்றுக்கள் |

| | | |
|---|---|---|
| சீராக்கப்பட முடியாத மொத்தம் ரூபா 3,841,385 ஆன முரண்கள் சீராக்கப்பட்டிருந்ததுடன் தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் சீராக்கப்பட வேண்டிய மொத்தம் ரூபா 322,000 ஆன முரண்கள் சீராக்கப்பட்டிருக்கவில்லை | ஆண்டிலிருந்து திருத்தப்பட்டுள்ளது. | தயாரிக்கப்படல் வேண்டும |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1978 இன் 7 ஆம் இலக்க சனாதிபதி நிதியச் சட்டத்தின் 6 ஆவது பந்தி | நிதியத்திற்குச் சொந்தமான நிதி, சபையினால் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின் பிரகாரம் சனாதிபதியின் ஏற்பாடுகளின் கீழ் பயன்படுத்தப்பட முடியுமான போதிலும், 2019 ஒக்டோபரிலிருந்து திசெம்பர் வரை செலவிடப்பட்ட மொத்தம் ரூபா 659,287,255 இற்காக கணக்காய்வு தினமாகிய 2021 ஆகஸ்ட் 02 ஆந் திகதி வரையில் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | விடையளிக்கப்படவில்லை .. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 372 | இந்திய துணை உயர் ஸ்தானிகர் அலுவலகத்தில் பேணப்பட்டு வருகின்ற ரூபா 6,000,000 ஆன கட்டு நிதியில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ உதவிக் கொடுப்பனவுகள் கட்டுநிதியில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளாக கருதப்படாமல் நேரடியாக காசுப் புத்தகத்தில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளாக | சனாதிபதி நிதியத்தினால் பேணப்பட்டு வருகின்ற ரூபா 6 மில்லியன் ஆன கட்டுநிதி போதியளவில் காணப்படாத சந்தர்ப்பங்களில் மருத்துவக் கொடுப்பனவுகளுக்காக காசோலைகள் வேறாக வழங்கப்பட்டிருந்தது.<br><br>அதன் பிரகாரம் இரு சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 8 மில்லியன் ஆன காசு மீதியில் அடங்குகின்ற | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும |

| | |
|---|---|
| கருதப்பட்டு காசு அடிப்படையில் கணக்கிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2019 திசெம்பர் 31 இல் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் அக்கட்டு நிதி மிகுதி ரூபா 6,000,000 என்பதுடன் இந்தியத் துணை உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட அம்மிகுதி ரூபா 13,909,814.17 மட்டுமே ஆகும். | ஆனால் வருட இறுதியில் வழங்கப்பட்ருந்தமையால் திசெம்பர் 31 வரையில் இக்காசோலைகள் மூலம் கொடுப்பனவிற்கு பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கட்டுநிதி மிகுதி அந்த அளவினால் அதிகரித்துள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 615,388,704 மிகையாக இருந்ததுடன் , அதற்கொத்த கடந்த வருடத்தின் நிதி விளைவு ரூபா 254,920,004 ஆன மிகை ஆகும். அதன் பிரகாரம் செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 360,468,700 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானம் அதிகரிப்பு ரூபா 530,607,859 அதாவது நூற்றுக்கு 22 வீதம் இம்முன்னேற்றத்திற்கு பிரதானமான காரணமாக இருந்ததுடன் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் செலவுகளிலும் அதிகரிப்பு ரூபா 169,860,392 ஆக உயர்வடைந்திருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் பிரதான வருமான மூலமான அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுவனவுகள் மற்றும் வட்டி வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 481.19 மில்லியனால் மற்றும் ரூபா 27.26 மில்லியனால் அதாவது நூற்றுக்கு 22 வீதத்தினால் மற்றும் நூற்றுக்கு 13 வீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், ஏனைய தரப்பினரின் பங்களிப்புப் பெறுவனவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 22.16 மில்லியனால் உயர்வடைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் நிதியத்தினால் மருத்துவ உதவி, நலன்புரி நடவடிக்கைகள், கலாச்சார நடவடிக்கைகள், சமய நடவடிக்கைகள், கல்வி நடவடிக்கைகள், விளையாட்டு மற்றும் கலை நடவடிக்கைகள், விசேட செயற்திட்டங்கள் மற்றும் உள்நாட்டுப் புலமைப் பரிசில் வழங்ல் என்பவற்றுக்காக மொத்தம் ரூபா 1,189.70 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அப்பெறுமதி மொத்தச் செலவில் சமவீதமொன்றாக கருத்தப்படின் அது நூற்றுக்கு 51 வீதமாகும்.

(இ) நலன்புரி நடவடிக்கைகள், விளையாட்டு மற்றும் கலை நடவடிக்கைகள், விசேட செயற்திட்டங்கள் மற்றும் உள்நாட்டு புலமைப்பரிசில் வழங்கல் என்பவற்றுக்காக செலவிடப்பட்ட செலவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே நூற்றுக்கு 87 வீதத்தால், நூற்றுக்கு 2700 வீதத்தால் மற்றும் நூற்றுக்கு 71 வீதத்தால் அதிகரித்திருந்ததுடன், மருத்துவ உதவி மற்றும் சமய நடவடிக்கைகள் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது முறையே நூற்றுக்கு 14 வீதத்தினால் மற்றும் நூற்றுக்கு 41 வீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் ரூபா 2,348 மில்லியன் தொகையொன்று முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 1,745 மில்லியன் முதலீடுகள் மீண்டும் பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் முதலீட்டுப் பெறுமதியில் ரூபா 603 மில்லியன் ஆன முன்னேற்றமொன்றைக் காட்டியது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஒவ்வொரு நோய்களுக்காகவும் கொடுப்பனவு செய்யப்படும் போது அந் நோய்களுக்கு நிதியத்தின் நிர்வாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பொது எல்லையினை விஞ்சியதாக 136 நோயாளர்களுக்கு மொத்தம் ரூபா 57,899,147 ஆனது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்நோய்களுக்கான கொடுப்பனவுகளின் எல்லைகள் விஞ்சப்பட்டமை அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுடன் ஒப்பிடும்போது நூற்றுக்கு 243 வீதமாகும். | அதிமேதகு சனாதிபதியால் விசேட அங்கீகாரத்தின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சமனான வாய்ப்புக்களை வழங்கும் முறையொன்றை உருவாக்குவதற்கான சாத்தியத்தைக் கருத்திற் கொள்ள வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நிதியத்தினால் மருத்துவ உதவிக் கொடுப்பனவவுகளுக்காக ரூபா 1,019.31 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் நலன்புரி, சமய, கலாச்சார, கல்வி, விளையாட்டு மற்றும் கலை மற்றும் விசேட செயற்திட்டங்களுக்காக மொத்தம் ரூபா 62,798,411 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அத்துடன் மீளாய்வாண்டில் புலமைப்பரிசில் முன்மொழிவொன்றுக்காக ரூபா 107,580,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அது முன்னைய வருடத்தில் அந்த புலமைப்பரிசில் | புலமைப்பரிசில்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட புலமைப்பரிசில் பெறுவோருக்கு புலமைப்பரிசில் தொகை இரண்டு தவணைகளில் வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டிற்காக புலமைப்பரிசில் பெறுநரின் தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டு அதன் பின்னர் அத்தவணை இரண்டு 2017 ஆம் ஆண்டிலேயே கொடுத்து முடிக்கப்பட்டிருந்தமையால் 2018 ஆம் ஆண்டில் புலமைப்பரிசில் வழங்குவதற்காகச் செலவிடப்பட்ட செலவுகள் குறைந்த மதிப்பில் எடுக்கப்பட்டமையால் இவ் | முறையான மற்றும் திட்டவட்டமான கொடுப்பனவு முறைமையொன்றை உருவாக்குவதற்கு கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முன்மொழிவொன்றுக்காக செலவிடப்பட்ட செலவுகளுடன் ஒப்பிடும்போது நூற்றுக்கு 71 வீதத்தால் அதிகரித்திருந்தது. | வேறுபாடு காட்டப்படுகின்றது. | |
| (இ) | மேற்படி நலன்புரிப் பணிகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 26,752,867 ஆன செலவுகளில் விசேட அங்கீகாரத்தின் பேரில் 66 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட அன்பளிப்புப் பரிசுகளின் கூட்டுத்தொகை உள்ளடங்கியுள்ளது. | குறிப்பிடப்பட்டுள்ளவாறு நலன்புரி நடவடிக்கைகளுக்காக செய்யப்பட்ட கொடுப்பனவுகள் அதிமேதகு சனாதிபதியின் அங்கீகாரத்தின் பேரில் சனாதிபதி நிதியத்தின் நோக்கம் மற்றும் செயற்பாடுகளுக்குரிய விசேட அங்கீகாரத்தின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை மையமாகக் கொண்டு சம வாய்ப்புக்களை வழங்கும் முறைமையொன்றை உருவாக்குவதற்கான சாத்தியக் கூறுகளை கவனத்திற் கொள்ளல் வேண்டும். |
| (ஈ) | 2019 ஆம் வருடத்தில் நிதியத்தின் ரூபா 22,545,544 விசேட செயற்திட்டங்களுக்காக செலவிடப்பட்டிருந்ததுடன் இதனுள் இலங்கை புற்று நோய்ச் சங்கத்தின், காலிக் கிளையினால் நிவாரண பராமரிப்பு மத்திய நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்ட ரூபா 53 மில்லியனுக்காக வழங்கப்பட்ட ரூபா 20 மில்லியன் முற்பணக் கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி ரூபா 2,545,544 ஆன தொகை கிராதுரு கோட்டே சுகாதார மேம்பாட்டு மற்றும் சமூக வலுவூட்டல் மையத்தை திறப்பதற்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்ட செலவாகும். | 1978 இன் 03 ஆம் இலக்க சனாதிபதி நிதியச் சட்டத்தின் 6(உ) பிரிவின் பிரகாரம் சனாதிபதியின் மற்றும் சபையின் கருத்தின் படி பொதுமக்களின் நலன்கள் அல்லது நலனுக்கான வேறு எந்த நோக்கத்திற்காகவும் நிதியத்தின் பணம் பயன்படுத்தப்படலாம். அதன் பிரகாரம் நிதியத்தின் மூலம் செலுத்தப்படும் கொடுப்பனவுகளான மருத்துவ உதவிகள், நலன்புரி, சமய, கலாச்சார, கல்வி, விளையாட்டு மற்றும் கலை நடவடிக்கைகளுக்குள் அடங்காத விடேச செயற்திட்டமொன்றாக அதிமேதகு சனாதிபதியின் விசேட அங்கீகாரத்தின் கீழ் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | விசேட செயற்திட்டமொன்றாக செலவிடப்படுகின்ற செலவுகள் தொடர்பான போதியளவு பின்தொடரல்கள் செய்யப்பட்டு அவற்றின் முடிவுகளை அதிகரிப்பதற்கு கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கணக்காய்வுத் தினமாகிய 2021 பெப்ரவரி 12 ஆந் திகதி வரையில், கிடைக்கப்பெற்ற மொத்த மருத்துவ உதவிகளுக்கான கோரிக்கைகளின் எண்ணிக்கை 6,784 அதாவது நூற்றுக்கு 31 வீதம் தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | 2020 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வருகின்ற கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக பல சந்தர்ப்பங்களில் அலுவலகம் மூடப்பட்டிருந்தமை மற்றும் குறைந்தளவு ஊழியர்கள் அலுவலக நடவடிக்கைகளில் ஈடுபட்டமை போன்றவை இதற்கு காரணங்களாகும். தற்போது கொடுப்பனவு நடவடிக்கைகள் விரைவுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பாதிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு விரைவில் பதிலளிப்பதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | புதிய அவதானமொன்றாக / காணப்பட்ட அவதானமொன்றாக | கட்டுப்பாட்டிற்கான கவனத்தை வெளிப்படுத்தல் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| அபிவிருத்தி லொத்தர் சபைச் சட்டத்தின் 11 (ஆ) பிரிவின் பிரகாரம் லொத்தர் மூலம் கிடைக்கின்ற பணத்தில், நிதியத்தின் செலவுகள் செய்யப்பட்டதன் பின்னர் மிகுதி சனாதிபதி நிதியத்திற்கு திருப்பியனுப்பப்படல் வேண்டும். ஆனால் அபிவிருத்தி லொத்தர் சபையிடமிருந்து அவ்வாறு பணம் அனுப்பப்படும்போது 22 நாட்கள் தொடக்கம் 409 நாட்கள் வரையிலான காலப்பகுதியில் தாமதமொன்று அவதானிக்கப்பட்டது. | புதிய அவதானிப்பு | பேணப்பட்டு வருகின்ற முறைமையை மேம்படுத்துதல் அவசியம் | இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டதன் பின்னர் திருப்பி அனுப்பப்படுகின்ற தொகை தீர்மானிக்கப் படுவதால் இத் தாமதம் ஏற்பட்டள்ளது. | நிதியத்தைப் பெறுவதை முறையாகச் செய்வதற்கு கவனம் செலுத்த வேண்டும். |